

# பரலோக பொக்கிஷங்கள்

## ஆவியானவர் நம்மீது தங்குவார்! [யோவான் 1:33]



### ‘துன்பத்தில் மகிழ்ச்சி இழக்காதே!’ ராபீன் குருவி பாடல்!

ஓர் அழகிய ராபீன் குருவி மழையில் நனைந்துகொண்டே இனிய பாடல் ஒன்று பாடியது! அந்த குருவி ஒரு முக்கிய பாடத்தை கற்றுக்கொடுத்ததைப்போல் இருந்தது! ‘மழைத்துளி’ ராபீன் குருவியின் மீது அதிகரித்து விழுந்து கொண்டே இருந்தது. ‘பாவம், இவ்வளவு நனைக்கிறதே’ என எண்ணினாலும், ராபீன் குருவியோ தனது பாடலின் இசையை இன்னும் அதிகமாய் தலையை உயர்த்தி பாடிக்கொண்டே இருந்தது! துன்பம் வந்தால் என்ன?.... அது, கூடிக்கொண்டே போனாலும் என்ன? என்னுடைய மகிழ்ச்சியின் பாடலை நான் நிறுத்திக் கொண்டது நியாயமல்ல என உணர்வதே அந்தப் பாடம்!

உள்ளத்தின் கீதமே, உன்னதருக்கு மகிமை!

-tr



## ஊழியம் கொள்ள அல்ல, ஊழியம் செய்வதே பாக்கியம்!

என் தந்தை வெளியூரில் நீண்ட மாதங்களாயிருந்த அலுவல் முடித்து, வீடு திரும்பிய வேளையில் மிகவும் சுகவீனப்பட்டார். ஒரு சில நாட்களில் என்னுடைய தாயாரும் சுகவீனப்பட்டார்கள். வீட்டில் வேலை செய்தவர்கள், தங்கள் நேரம் முடிந்ததும் சென்று விடுவார்கள். மற்ற எல்லா நேரங்களிலும் நானே தனித்து நின்று வயதான என் தந்தையையும், என் தாயையும் மிகுந்த அன்புடன் கவனித்துக் கொண்டேன். அந்த சமயத்தில் இயேசு கிறிஸ்து கூறிய "ஊழியம் கொள்ள அல்ல, ஊழியம் செய்யவே வந்தேன்" என்ற அவரது வார்த்தை எனக்கு உயிரோட்டமாயிருந்தது. வயதான என் தந்தை மிகுந்த பக்தியுள்ளவர். அடிக்கடி வேத வசனத்தை நான் அவருக்கு வாசிக்கும்படி கேட்டுக் கொள்வார். நான் அவைகளை தியான உணர்வோடு வாசிக்கும் போது, என் தந்தை அந்த வசனங்களை மிகுந்த மகிழ்ச்சியுடன் கேட்பார். இதுபோன்ற நேரத்தில் பக்தர்களின் வாழ்க்கை சரிதை என் நினைவுக்கு வந்தது:

நாம் பிறருக்கு ஊழியம் செய்யும்போது "நிறைவான அன்புடனும் ஸ்தோத்திரத்துடனும் ஊழியம் செய்ய வேண்டும்!" என்ற போதனை, என் வயோதிப பெற்றோர்களுக்கு நான் செய்த பணிவிடைக்கு வெகுவாய் கைகொடுத்தது!

*-Ed*

**2026 'பரலோக பொக்கிஷங்கள்' சந்தா புதுப்பிக்கவும்**

வருட சந்தா **ரூ.170/-** தயவுசெய்து உடன் M.O செய்து அல்லது ஆன்லைன் மூலம் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு **மே 20-ம் தேதிக்குள்** அனுப்பி புதுப்பித்துக்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். ஒரே விலாசத்தில் 3 பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.140/- அயல்நாடு ஒரு பிரதி ரூ.950/- அனுப்ப வேண்டும். புதுப்பித்துக் கொள்பவர்கள், தங்கள் சந்தா எண்ணை குறிப்பிடவும், புதிதாய் வாங்குபவர்கள் 'புதிது' என்று குறிப்பிடவும்.நன்றி!

வங்கி கணக்கு: MADURAI CHRISTIAN FELLOWSHIP, Indian Bank - Koodal Nagar Branch
A/c No: **502087685** IFSC Code: IDIB000K150
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)
பின்பக்கம் உள்ள **QR** கோடு மூலம் **G-Pay** அனுப்பலாம்.

கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள் 207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018,S.India Cell : 98430 49935 Ph (O) 0452 - 7966138
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com
You Tube : (for Spiritual messages) paralogapokkishangal
You Tube : (for Gospel messages) gospelforall

## மதியீனமான துக்கத்தை, மறுத்துவிடுங்கள்!

*நம்பிக்கையின் தூரப்பார்வையே நம் தேவை*

பெரும்பான்மையான கிறிஸ்தவர்களின் துக்கம் 'விந்தையான மதியீனமாகவே' இருக்கிறது! மதியீனமான துக்கத்திற்கு ஆளானவர்கள், ஒன்றை கற்றுக்கொண்டு, அந்த துக்கத்திலிருந்து விடுதலையாவதற்குகூட, அறியாதவர்களாய் இருக்கிறார்கள் (மத்.27:61). இதுபோன்ற நிலையில்தான், அன்று இயேசுவின் கல்லறைக்கு எதிராக "மகதலேனா மரியாளும், மற்ற மரியாளும்" துக்கத்தோடு அமர்ந்திருந்தார்கள். இன்னும் சில நாட்களில் ஜெயமாய் உயிர்த்தெழும் ஆண்டவர் இயேசு, இன்றைய நமது 2026வருடம் வரையிலும், இன்னும் நித்திய நித்தியமாய் உயிரோடு இருப்பார் என்ற மகிழ்ச்சியை அவர்களால் காணமுடியவில்லை! அவர்களுடைய நினைவில் நின்றதெல்லாம் "**எங்கள் இயேசுவை காணவில்லை**" என்பதைத் தவிர, வேறொன்றையும் அவர்கள் காண முடியாதிருந்தது!

ஆனால், "அவரை இழந்தோம்" என்ற இடத்திலிருந்துதான், உங்களுடையவரும்! என்னுடையவருமான! இயேசு, கெம்பீரமாய் எழுந்து வருகிறார்.

> "**நிலைநிற்கும் சத்தியம் என்னவென்றால், "துன்பத்தில் துவண்ட எண்ணற்ற தாசர்கள், தங்கள் துயரத்தின் மத்தியில், உயிர்த்தெழுந்த இயேசுவை கண்டார்கள்" என்ற நற்செய்திதான்!**

துயரத்தின் மனமடிவில் உட்கார்ந்து காத்துக்கொண்டிருந்தவர்களோ, இயேசுவின் ஆரம்ப மரணத்தை மாத்திரமே பார்த்தார்கள்! வேறொன்றையும் அவர்களால் காணமுடியவில்லை. 'இனி என்ன, எல்லாம் முடிந்துவிட்டது' என இவர்கள் எந்த வாழ்க்கையை சலித்துக் கொண்டார்களோ, 'அதுவே' மகுட ஜீவியத்திற்கு ஆரம்ப ஆயத்தமாய் மாறிடும் பாக்கியம் கொண்டுள்ளது! கிறிஸ்துவுக்கோ, ஜெயமான ஜீவியத்திற்கு அதிகமான மௌன நேரம் தேவையாய் இருந்தது!

ஆனால், அந்த ஸ்திரீகளோ 'இந்த மறைவான

மகத்துவங்களை' கிறிஸ்துவின் மரணத்தில் காணமுடியவில்லை. அவர்கள் அழுதார்கள், அவர்கள் துக்கித்தார்கள், பின்பு எழுந்து போய்விட்டார்கள்! பின்பு அவர்கள், அதே கல்லறைக்குத் திரும்பவும் வந்தார்கள், மீண்டுமாய் அவர்கள் அந்த ஒளியிழந்த, கிறிஸ்துவின் மரணத்திற்குப்பின் சம்பவிக்கப் போகும் நற்செய்தியை சொல்ல முடியாது நின்ற 'அதே வறண்ட கல்லறையை' மீண்டும் மீண்டுமாய் கண்டார்கள். இவ்வாறாகவே, நம் அநேகருடைய ஜீவியத்தில் சம்பவிக்கிறது. அவரவர்கள் ஜீவியத்திலுள்ள 'கல்லறை போன்ற' வேதனைக்கு அருகில் அமர்ந்து, "இனி எனக்கு எந்த நன்மையும் இல்லை? நான் ஆறுதல் பெற எதுவும் நடக்கப் போவதில்லை?" என்ற புலம்பலே, கிறிஸ்தவ விசுவாசிகளிடத்தில் மண்டிக்கிடக்கிறது.

> **"ஆனால் நற்செய்தி என்னவென்றால், இத்தனை துன்பமான வாழ்வின் நடுவே, கிறிஸ்து உங்களுக்காக உயிர்த்தெழுந்து வர காத்திருக்கிறார்!**

*நமக்கு மரணத்தைப் போலிருக்கும் துயரம் எங்கு சம்பவிக்கிறதோ, அங்கிருந்தே நம் இரட்சகர் எழுந்து வருகிறார்! நம்பிக்கையற்ற வறட்சியில் 'கனிதரும் வாழ்வு' ஆரம்பிக்கச் செய்கிறார்! அடர்ந்த இருளின் மத்தியில் மங்காத ஒளியின் பிரகாசம் சுடர்விடச் செய்கிறார்! சம்பவித்து விட்ட கல்லறை போன்ற துக்கம், தங்கள் வாழ்க்கையை சீர்குலைத்ததாகவே காண்கிறார்கள்! உண்மை என்னவென்றால், இந்த துயரத்தின் நடுவில்தான் நமக்குள்ளிருந்த கொஞ்ச சந்தோஷம், மிகுந்த சந்தோஷமாய் மாறுகிறது! ஆம், இந்த துக்கத்தில்தான் மறுமலர்ச்சி தோன்றிவிட்டது!*

மேலும், இவர்களுக்காக தேவன் மலரவைத்த 'பூக்களை' இவர்கள் பறித்து அனுபவிக்கக் கூடாததாய் இருப்பதும் ஒரு துயரம்தான்! **அது ஏனென்றால், அந்த பூக்கள் யாவும் இருதயத்தை மலர வைக்கும் நறுமண பூக்கள்!** அன்பு, இருதயத்திற்குரியது! விசுவாசம், இருதயத்திற்குரியது! சந்தோஷம், இருதயத்திற்குரியது! சமாதானம், இருதயத்திற்குரியது! நம்பிக்கை, இருதயத்திற்குரியது! ஒரு மெய் கிறிஸ்தவனின் 'கல்லறை துயர வாழ்க்கையில்' அவனது இருதயத்தைச் சுற்றிய தோட்டத்தில், இந்த நறுமணப் பூக்களையே தேவன் மலரும்படி செய்கிறார்! லௌகீக கிறிஸ்தவர்களுக்கு, இவ்வித ஒப்பற்ற ஆவிக்குரிய நறுமண பூக்களின் மேன்மை விளங்குவதில்லை! கிறிஸ்துவுக்கு சொந்தமானவர்களோ, இந்த மலர்களையே அதிகமாய் போற்றி, மேன்மை பாராட்டுவார்கள்! அவைகள், சிலுவைப் பாதையின் இருமருங்கும் பூத்துக் குலுங்கும், ஆனந்த நறுமண மலர்கள்! ஆமென்.

- *Mrs.சார்லஸ் கஃவ்மென்*

## 'நம் ஆசீர்வாதத்தை' நாமே தடை செய்வது சரிதானா?

*முன்பின் தெரியாமல் செய்திடும் தீய விமர்சனம் தவறு*

**ந**ம்முடைய கடந்த கால வாழ்க்கையை வேதம் குறிப்பிடும்போது "மற்றவர்களால் நாம் பகைக்கப்பட்டு, நாமும் மற்றவர்களை பகைக்கிறவர்களாய் இருந்தோம்" என தீத்து *3:3* தெளிவாய் கூறுகிறது. இப்படித்தான் அவபக்தியான யாவருமே வாழ்ந்தார்கள், அந்நாட்களில் நாமும் அவர்களைப்போலவேதான் வாழ்ந்தோம்: "மற்றவர்கள் என்னை பகைக்கிறார்கள், நானும் அவர்களைப் பகைக்கிறேன்!" என்ற பரிதாபமான நிலை. இன்னும் அதிகமாய், மனந்திரும்பிய திரளான விசுவாசிகள்கூட தொடர்ச்சியாய் கைக்கொண்டு வரும் ஓர் கொடிய பாவம் உண்டு.... அதுஎன்னவெனில், "மற்றவர்களை தீமையாய் விமர்சிக்கும்" (Criticising) செயலேயாகும்.

> **"பிறரை பகைப்பதை" நிறுத்திவிட்ட விசுவாசிகள், "பிறரை தீமையாய் விமர்சிக்கும் தீய செயலை தொடர்ந்து செய்வது பரிதாபமல்லவா?".**

தீத்து *3:3* கூறிய பிரமாணத்தின்படி 'பகைக்கப்பட்டு பகைத்தோம்'. இப்போதோ, மற்றவர்களை தீமையாய் விமர்சித்து, நாமும் தீமையாய் விமர்சிக்கப்படுகிறோம்! என்ற அதே பிரமாணத்திற்குள் சிறைப்பட்டுள்ளோம்! இதுபோன்ற நிலையை, வேதப்பூர்வமாய் நீங்கள் அறிந்து விளங்கிக் கொள்வது நல்லது: "பிறரை பகைப்பதற்கும், பிறரை தீமையாய் விமர்சிப்பதற்கும்" இடையில் எந்தவொரு வித்தியாசமும் இல்லை என்பதேயாகும். இந்த இரண்டு பாவங்களுமே **'ஒரே பிதாவாகிய பிசாசிடமிருந்தே'** புறப்பட்டு வருகிறது!

பிறருடைய சுபாவங்களை உங்களின் ஓரக்கண்ணால் மறைவாக கவனித்துப் பார்க்கும் சமயங்களில் எல்லாம், அந்த நபரைக் குறித்த உங்களின் சொந்த தீமையான அபிப்பிராயங்கள் புற்றுநோய் கிருமி போல உங்களுக்குள் வளர்ந்து கொண்டே வரும்! இவ்வாறு 'மறைந்து வளர்ந்த' தீய அபிப்பிராயங்கள் இன்னமும் உள்ளே வைத்திருக்க முடியாமல், அந்த நபரைக் குறித்து ஒருநாள் வெடித்து வந்துவிடும்! **அவ்வாறு வெடித்து வெளிப்பட்ட பாவம் 'பிசாசின் மொத்த ரூபம்' என்றே இப்போது கூறலாம்.** இங்குதான் பிசாசு உங்களுக்கு எஜமானாய் மாறி, அந்தப் பாவத்திற்கு நீங்கள் அடிமையாகவே மாறி விடுகிறீர்கள். தேவனுடைய இந்த வெளிச்சத்தைப் பெறாமலே, பல ஆண்டுகளாய் வாழ்ந்துவிட்ட சகோதர சகோதரிகளின் நிலைமை மிகவும் பரிதாபம் என்றே கூறலாம்!

*இவ்விஷயத்தில் நீங்கள் தேவனுடைய வெளிச்சத்தை விரும்புகிறவர்களாயிருந்தால்* **'இரண்டு வேத வாக்கியங்கள்'** *உங்கள் ஞாபகத்தில் எப்போதும் நிலைத்திருக்க வேண்டும். பகலானாலும் இரவானாலும், இந்த வசனங்களை நீங்கள் தெய்வ பயத்துடன் கைக்கொண்டு வாழ்ந்தால், புத்தியீனத்திலிருந்து விலகி ஞானவான்களாய் மாறிவிட முடியும்!*

*1."நியாயப்பிரமாணம் இல்லாவிட்டால், மீறுதலும் இல்லை" என்ற ரோமர் 4:15 வசனமேயாகும். 2."நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம்!" (1யோவான் 3:4). ஒருவர் நியாயப்பிரமாணத்தை தனக்கென்று பெற்றுவிட்டால், பின்பு அதை மீறுவது பாவமாகிவிடும். ஆனால் பிரமாணமே அவனுக்குத் தெரியாதபட்சத்தில், மீறுதலும் அவனுக்கு இல்லை. ஆவியின் எல்லா பிரமாணங்களும் தேவனுக்குள் அடங்கியிருக்கிறது! நாம் கிறிஸ்தவ ஜீவியத்தில் வளர்ந்து வர வர இந்தப் பிரமாணங்களை நம் இருதயத்திலும், நம் மனதிலும் தேவன் ஒன்றன்பின் ஒன்றாய் எழுதி வைப்பார்! (எபி.8:10). இவ்வாறு அந்தப் பிரமாணங்களை தேவன் இன்னமும் உங்கள் இருதயங்களிலும், உங்கள் மனதிலும் எழுதியிருக்காத பட்சத்தில் 'பிரமாணங்களை நீங்கள் மீறியவர் என்ற' பாவம் ஏற்படாது! ஏனென்றால், "பிரமாணம் இல்லாத இடத்தில், மீறுதலும் இல்லை!".*

*நீங்கள் ஒரு குறிப்பிட்ட தேவனுடைய பிரமாணத்திற்கு, முற்றிலும் விரோதமாக நீங்கள் யாதொன்றைச் செய்து, அந்தப் பிரமாணமோ, இன்னும் உங்கள் இருதயத்திலும் மனதிலும் எழுதப்படாதிருந்தால், நீங்கள் தேவனுக்கு முன்பாக முற்றிலும் குற்றமற்றவர்! உங்களைச் சுற்றியுள்ள மற்ற அனைவரும் 'உங்களை குற்றமுள்ளவர்' என கூறினாலும், ரோமர் 4:15 வேத ஆதாரத்தின்படி நீங்கள் குற்றமற்றவர்கள்!*

> "இந்த முழு அண்ட சராசரத்திலும் தேவன் ஒருவர் மாத்திரமே பிழையற்ற நீதிபதி! அவர் உங்களைப் பார்த்து "நீங்கள் குற்றமற்றவர்" என கூறிவிட்டால், நீங்கள் மெய்யாகவே குற்றமற்றவர்தான். ஏனெனில், தேவனைக் காட்டிலும் மிஞ்சிய வேறொரு நீதிமன்றம் வேறொன்றுமில்லை!

*அதே சமயத்தில், நீங்கள் யாரை* **குற்றமுள்ளவர்** *என தவறான அபிப்பிராயம் வைத்தீர்களோ, அவர்களை தேவன் 'அறியாத களங்கமற்றவர்' என்றே தேவன் அறிவிப்பார் என்பதை நீங்கள் மனதில் வைத்துக் கொள்ளுங்கள். எப்படியெனில், 'நீங்கள் குற்றமற்றவர்'*

*என்ற உண்மையில் நீங்கள் மகிழ்ச்சியாய் இருந்ததுபோலவே, இதே சத்தியத்தின் மகிழ்ச்சியில், முன்பு நீங்கள் யாரையெல்லாம் குற்றமுள்ளவர் என மனதில் வைத்தீர்களோ அவர்கள் அனைவரும் "அறியாத - குற்றமில்லாதவர்" என தேவனோடு சேர்ந்து அறிவித்திட, நீங்கள் மனதுடையவர்களாய் இல்லையென்றால், உங்களை நீங்களே வஞ்சித்துக்கொண்டீர்கள் என்பதை அறியுங்கள்! நான் சத்தியத்தை அறிந்து கொண்டேன் என நீங்கள் கூறியதும், மாறுபாடு கொண்டதாகும்!*

"**ஆனால், ஒருவர் தன் இருதயத்தில் ஏற்கனவே எழுதப்பட்ட பிரமாணத்தை ஒரு சூழ்நிலையில் மீறுவார் என்றால் அவர் நிச்சயமாய் பாவம் செய்தவராய் மாறுகிறார் என்பதில் சந்தேகமே இல்லை!**

*இந்த ஒரே ஒரு ஆவிக்குரிய கடின ஆகாரத்தை மென்று சுவைத்து ஜீரணித்து விடுங்கள். அப்போது இந்த சத்தியம், ஆண்டு முழுவதும் உங்கள் ஜீவிய திராட்ச தோட்டத்தில் ஏராளமான கனிகளை கொடுத்து விடும் என்பதை முன்கூட்டியே அறிவித்து, உங்கள் வாழ்த்துகிறேன்!*

*- எலியாஸ் அஸ்லாக்சன்*

---

## வாழ்ந்திடாத சத்தியங்கள், அவர்களுக்கே பயனற்றுப்போனது!

*ஜீவ ஆவியை, சத்தியங்கள் 'திரை சீலையாய்' மறைத்திட முடியும்*

*வெளிச்சத்தை விட, "அதைக் காணும் கண்கள்" வேண்டும் என்ற உண்மையை நாம் அனைவருமே ஏற்றுக்கொள்ள முடியும்! வெளிச்சத்திற்கும்.... பார்வைக்கும் இடையே ஏராளமான வித்தியாசம் உண்டு. ஒரு மனுஷனுக்கு வெளிச்சம் இருந்தும், காணும் பார்வை இல்லையென்றால்.... அவன் குருடன்!*

*பரிசேயர்கள், உலகத்திற்கே ஒளியாய் வந்தவரை மூன்று வருடங்கள் பார்த்தார்கள்! அவ்வளவு பெரிய வெளிச்சத்தில் 'ஒரு சிறிய கதிரொளி கூட' அவர்களின் உள்ளான மனுஷனின் பார்வையில் தோன்றவில்லை. ஆகவேதான் "சத்தியம்.... சத்தியம்" என கொண்டாடுவதிலோ அல்லது "வெளிச்சம்.... வெளிச்சம்" என ஆர்ப்பரிப்பதிலோ பூரண மகிழ்ச்சி இல்லை என்பதை நாம் யாவரும் அறிந்து கொள்ள வேண்டும்! ஆம், உங்களை முற்றும் முடிய இரட்சிக்க,* **பரிசுத்த ஆவியின் உள்ளான கிரியையே** *இன்றைய நமது தேவையாகும்!*

"**கிறிஸ்துவின் சுவிசேஷமே, ஒளிதான்! ஆனால் அதன் உள்ளே சென்று சுதந்தரிக்கும் 'பார்வையை' ஆவியானவர் மாத்திரமே தந்திட முடியும்!**

*பவுலின் நிருபங்களை ஆராய்ந்து போதித்த பெரும்பாலான வேத பண்டிதர்கள் 'செயற்கையான பரிசுத்தவான்களையே' உருவாக்க முடிந்தது. இதை பேதுரு குறிப்பிடும்பொழுது "பவுலின் நிருபங்களை, மற்ற வேத வாக்கியங்களைப் புரட்டுகிறது போல, தங்களுக்கு கேடு வரத்தக்கதாக இவைகளையும் புரட்டுகிறார்கள்" என 2பேதுரு3:16-ல் எச்சரித்து கூறியுள்ளார். இது ஆச்சரியமல்லவா? பவுல் போதித்த உபதேசங்களை எழுத்தின்படி சரியாகத்தானே வியாக்கியானம் செய்து போதித்தார்கள்.... ஆனால், அதை கேட்டவர்களுக்கு யாதொரு பலனும் கொண்டு வந்து தரவில்லை!*

> "
> **பவுலின் போதகங்களுக்கும்.... பவுலின் ஜீவியத்திற்கும் இடையே பெருத்த வித்தியாசம் உள்ளது. பவுலின் போதகங்களை கொண்டாடிய இவர்களிடம், பவுலின் ஜீவிய ஆவி சிறிதும் காணப்படவில்லை!**

*ரோமர் வியாக்கியானமென்றும், எபேசியர் வியாக்கியான மென்றும், புத்தக சாலையில் பவுலின் எண்ணற்ற வியாக்கியான புத்தகங்கள் குவிந்து கிடக்கின்றன. அதை எழுதியவர்களாகட்டும் அல்லது அந்த வியாக்கியான புத்தகங்களை வாசித்தவர்களாகட்டும், அவர்களின் இருதயத்திற்கும் பவுலின் இருதயத்திற்கும் இடையே அவ்வளவு பெரிய* **ஆவிக்குரிய பிளவு** *காணப்படுகிறது!*

*இந்த பவுல் 'இயேசுவின் ஜீவனை' தேடி கண்டுபிடித்தார், தன் கடைசி மூச்சு வரை தேடிக் கொண்டேயிருந்தார்! ஆனால் அவர் நிருபங்களை, பண்டித ஞானத்தோடு கற்றறிந்த இந்த ஜனங்களோ, நாங்களும் கண்டுபிடித்தோம் அல்லது "எங்களுக்கும் எல்லாம் விளங்கிவிட்டது" என இறுமாந்திருக்கிறார்கள்! ஆனால், தொடர்ச்சியான* **தீராத ஜீவிய தேடுதலோ** *அவர்களிடத்தில் இல்லவே இல்லை, வேத பண்டிதத்தோடு நின்றுவிட்டார்கள்!*

*__வெ__ளிப்பாடு பெற்றதாகக் கூறிக்கொண்ட வேத அறிவு சத்தியங்கள், 'தேவனுடைய முகத்தைக் காணமுடியாத' திரையாய் அவர்களுக்கு மாறிவிட்டது! ஆனால், கர்த்தருடைய ஊழியனான பவுலிற்கோ, அவர் கண்டறிந்த சத்தியங்கள், தேவனுடைய சமூகத்திற்குள் பிரவேசிக்கும் மங்களமான வாசலாய் மாறிவிட்டது! இந்த பவுல், தன் ஆவியில் அப்படியொரு தேடுதலை பெற்றிருந்தார். தேவனுடைய பர்வதங்களில் ஏறி, தேடித் தேடி, தேவனோடும் கிறிஸ்துவோடும் நெருங்கிய ஆவிக்குரிய பந்தத்தை விலையேறப் பெற்ற கொள்ளைப் பொருளாய் சேர்த்துக் கொண்டார்! அவரை அறிகின்ற அந்த ஐக்கியம் ஒன்றைத்தவிர 'உபதேச அறிவு உட்பட'*

*அனைத்தையும் குப்பையெனக் கண்டார்! ஆனால் இன்றோ 'பவுலின் உபதேசங்கள்' என மேன்மை பாராட்டிக் கொள்ளும் திரளான மக்கள், துரதிருஷ்டமாய் அவரது தீராத திவ்விய ஏக்கத்தை பெற்றுக் கொள்ளவில்லை!*

"

**வெளிச்சத்தை அல்லது சத்தியத்தை நீங்கள் தொட்டு அனுபவிக்காத வரையில், உங்களின் சரியான சத்தியம் 'பொய் உபதேசத்தை' விட மேலானதல்ல!**

*நீங்கள் உயர்ந்த வெளிப்பாடு என மேன்மை பாராட்டிய பவுலின் சத்தியங்கள், பேதுரு இடித்துரைத்ததைப் போல்* '**கேடான அழிவைத்தான்**' *உங்களுக்கு கொண்டுவரும்! (2பேதுரு3:16). அன்று மோசேயின் பிரமாணங்களைப் போற்றி, உச்சாங்க ஆசனத்தில் அமர்ந்திருந்த வேதபாரகர்கள் 'பிழையான உபதேசம்' கொண்டவர்கள் அல்ல! அவர்கள் பலியாகிப் போன தோல்வியெல்லாம்.... தாங்களே போதித்த சத்தியத்தை அவர்கள் அனுபவிக்கவில்லை! 'வெளிச்சம்' எனக்கூறிய அவர்களின் பரவசத்தில் 'பார்வை'யில்லை! ஆ, இந்த துயரம் நம்மில் ஒருவருக்கும் ஏற்படாதிருப்பதாக! ஆமென்.*

*- A.W.டோசர்*

---

## விவாகரத்து அபாயம்! அது, தேவனையே பிரித்துவிடும்!

*கிறிஸ்தவன் 'தன் வாழ்க்கைத்துணையை' அன்பு மங்காது நேசிப்பான்*

*'**வி**வாக சம்பந்தம் பிரிக்கப்பட' ஆண்டவர் இயேசு கொஞ்சமும் சம்மதிக்கவில்லை! வேசித்தன முகாந்திரத்தில் 'தள்ளுதற் சீட்டு'* (Divorce Certificate) *கொடுத்துவிட்டு, விவாகம் செய்து கொள்ளலாம் என்று மோசே சொன்னது, உங்கள் இருதய கடினத்தினிமித்தமே! ஆதிமுதலாய், 'அப்படி இல்லை!' என இயேசு உறுதிபடுத்தி கூறினார்! ஒருமுறை செய்த விவாகமே விவாகம், மறுவிவாகம் இல்லை! என்றார். இந்தக் கண்டிப்பான வார்த்தைகளைக் கேட்ட பரிசேயருக்கு எவ்வளவும் திருப்தியில்லை. அவர்கள் 'தகாத நோக்கத்துடன்' வந்ததால், இப்போதனை அவர்களுக்குப் பிரயோஜனப் படவுமில்லை (மத்.19:6-9).*

*சீஷர்கள் மனதில்கூட, இயேசு வழங்கிய புதிய உபதேசம் திகிலை உண்டாக்கிற்று. பரிசேயரைப்போலவே இவர்களுக்கும் ஆண்டவர் சொன்னது கடினமாகத் தோன்றிற்று. வீட்டுக்கு வந்தவுடன் அவர்கள் இயேசுவைப் பார்த்து: "புருஷனுடைய காரியம் இவ்வளவு ஆபத்திலிருந்தால், அவன் விவாகம் பண்ணாமல் இருந்துவிடுவதே*

*நல்லது" என்றார்கள் (மாற்கு 10:10). ஏனென்றால், விவாகத்தில் தேவன் நியமித்த கற்புடைமை இவ்வளவு உயர்வாயிருக்கும் என்று அவர்கள் நினைத்ததில்லை.*

> **"ஒரு புருஷன் தன் மனைவியோடு சந்தோஷமாக வாழக்கூடாத எத்தனையோ காரணங்களைக் கூறிட முடியும்! அப்படியிருந்தும், கட்டின மனைவியோடு மரணபரியந்தம் வாழவேண்டுமென்று இயேசு போதித்தது ஏற்புடையதாய் இல்லை என்றே நினைத்தார்கள்!**

*பின்பு சீஷர்கள், "ஆண்டவரே, நீர் சொல்லுவது உண்மைதான்! அது மேலான நோக்கந்தான்! ஆனால் அதை கைக்கொண்டு நடக்க யாரால் கூடும்? இது விஷயத்தில் அவரவருடைய பிரியம்போல் விட்டு விட்டால் அல்லவோ 'தங்களுக்கு இஷ்டமான' மனைவிகளைத் தேடிக் கொள்ளக்கூடும். ஒரு மனைவி சரிப்படாவிட்டால், வேறொருத்தியைக் கட்டிக்கொள்ள மனுஷனுக்கு சுயாதீனம் இல்லாமலும், அதை ஒருவனும் திரும்ப அவிழ்க்கக்கூடாதென்றும், பிரிந்துபோனவர்கள் வேறு கலியாணம் செய்தால் அது விபசார மென்றும் நீர் போதிப்பதைப் பார்த்தால், விவாகம் பண்ணாமல் இருந்து விடுவதே பரவாயில்லை போல் தோன்றுகிறதே?" என்ற யூகத்தில் கேட்டார்கள்! (லூக். 19:10,11).*

*சீஷர்கள் சொன்னது நியாயமே என, நம்மில் அநேகருக்குகூட தோன்றலாம். அன்று சீஷர்கள், நம்மெல்லாருக்காகவும் பரிந்து பேசினது போலவும் காணப்படலாம்!?*

*ஏனென்றால், விவாக சம்பந்தத்தில் அநேகருக்கு நிறைவான சந்தோஷம் இல்லை: "நினைத்தது ஒன்றாயிருக்க, வாய்த்தது ஒன்றாயிருக்கிறதே! குண ஒழுக்கபேதத்தால், ஓயாச் சண்டையும் ஒழுக்கு வீடுமாயிருக்கிறதே! என் படிப்புக்கும் என் புத்திக்கும் இவள் ஏற்றவளா? மட்டுக்கு மிஞ்சின நாகரீகம் என்று மண முடித்து, மட்டுக்கு மிஞ்சின அவமானமாயிருக்கிறதே! 'தனத்தை' (Riches) எதிர்பார்த்து தரித்திரமாச்சுதே! அன்பை நாடி மணம்புரிந்து, எந்நேரமும் வம்பாயிருக்கிறதே!" இவ்வாறு பலவாறாய் மனதைக் குழப்பி வருந்தும் புருஷர் அனேகர் இருக்கலாம்!*

*இதுபோலவே மனைவிகளும் வருந்தலாம்: "ஆளைப்பார்த்தேனே அல்லாமல் 'இருதயத்தைப்' பார்க்கவில்லையே! மேன்மையாக வைத்திருப்பார் என்றெண்ணிச் சிறுமை அடைகிறேனே! இவருக்குத் தானே கீழ்ப்படிவேன் என்று வாக்குக்கொடுத்தேன். இங்கு வந்தால், ஆளாளுக்கு அதிகாரம் பண்ணுகிறார்களே! தனக்குள்ள எல்லா வற்றையும் எனக்குக் கொடுப்பேன் என்று ஆலயத்தில் சொன்னாரே,*

*சம்பளத்தை என் கண்ணால் காணவில்லையே! பிறர் முகம் பாராமல் என்னையே நேசிப்பதாகச் சொன்னாரே, என்னை மறந்து எத்தனைபேரையோ சிநேகங்கொண்டாரே! விவாகமான சமயத்தில் அன்பு பாராட்டினவர், இப்போது என்னை முழுவதும் வெறுக்கிறாரே"*
**இவ்வாறு, பலவாறாய் வருந்துகிற மனைவிகளும் அனேகர் இருக்கலாம்!**

*இவைபோன்ற பல காரணங்களால் பிரயோஜனமென்ன? குடும்ப ஜீவியத்தைக் கசப்பாக்கியது மாத்திரமே நடந்தது! இவ்வாறு சந்தோஷமற்ற ஜீவியம் செய்வதைவிட, பிரிந்துபோய் வேறு விவாகம் செய்துகொண்டால் என்ன? என்று நினைப்பார் அனேகர் உண்டு. வீட்டுக்குள் இருந்துகொண்டே பிரிந்தவர்களைப்போல் ஜீவிப்பாருமுண்டு! அவமானத்துக்கு அஞ்சி, சகல குறைவுகளையும் தங்களுக்குள் அடக்கிக் கொள்ளுகிறவர்களும் உண்டு! துன்பம் சகிக்கக்கூடாமல், தகப்பன் வீட்டுக்குப் போய்விடுகிற மனைவிகளும் உண்டு! அவ்வாறு போனாலும், வேறு விவாகம் செய்யக் கூடாதாகையால், அவர்கள் துக்கம் நீங்குவதில்லை. இந்நிலையிலுள்ள பெற்றார், தம் மக்களைப் பார்க்கும் போதெல்லாம், பெருமூச்சு விடாதிருக்க முடியாது! நமது மகளை விவாகம் செய்யாமல் வைத்திருந்தோமில்லையே என்றுகூட புலம்பலாம்!*

"ஆனால், இவர்களில் யார் குற்றவாளிகள் என்று விசாரிப்பது இங்கே நமது வேலையல்ல. பிற தேசங்களிலுள்ள கிறிஸ்தவர்களோ, வெகு இலேசாய் நியாயஸ்தலம் சென்று, பல காரணங்களைச் சொல்லி, தள்ளுதற் சீட்டைப் பெற்று, வேறு விவாகம் செய்து கொள்ளுகிறார்களென்பது எவ்வளவு துணிகரம்! தேவனுக்கேற்காத பாவம் செய்கிறார்களே!

***வி**விவாகம் செய்துகொண்ட புருஷர் மனைவிகள், பிரிந்துபோய் மறுகலியாணம் செய்வதினால் சந்தோஷமாய் வாழலாம் என்று நினைப்பது வஞ்சகம். தள்ளுதற்சீட்டைப் பெற்றுக்கொள்வது தேவ ஏற்பாட்டுக்கு விரோதமாகயிருப்பதால், தேவாசீர்வாதம் கிடைப்பதில்லை! நமது குடும்ப ஜீவியத்தில் பல குறைவுகள் இருந்தபோதிலும், விவாகம் தேவனால் இணைக்கப் பெற்றது என்பதை மறக்கக்கூடாது! அந்த சம்பந்தத்தைவிட்டுப் பிரிந்து, மறுவிவாகம் செய்வது, விவாகம் என்றெண்ணப்படாமல் **பாவம்** என்றாகும்! இஷ்டம்போல் மனைவிகளைத் தள்ளிவிடலாம் என்று தேவன் இடங்கொடுத்திருந்தால், அது எங்கேபோய் நிற்கும் என்று யார் சொல்லக்கூடும்? மனுஷனுடைய ஆசைக்கோ அளவில்லை.*

*மரண பரியந்தம் அவன் ஒன்றிலும் திருப்தியடையமாட்டான்! அவன் எத்தனை ஸ்திரீகளைத் தள்ளி எத்தனை ஸ்திரீகளைச் சேர்த்துக் கொள்வானோ தெரியாது! 'தேவ அறிவில்லாத புற ஜாதிகளுக்குள்' இவ்வித ஒழுங்கீனங்களை ஏராளம் காண்கிறோமே! சாமான்களைப் பரிமாறுகிறது போலவே ஸ்திரீகளையும் நடத்துகிறார்கள். இவர்கள் தேவ அறிவும், பொதுவான கற்புடைமை இல்லாதவர்களாகையால், புருஷர்ஸ்திரீகளின் மேன்மையை அறியாமல், அநேக ஒழுங்கீனமான காரியங்களைச் செய்கிறார்கள்!*

**" ஆயினும் கிறிஸ்துவை தங்கள் குருவாய் ஏற்றுக்கொண்டு, உத்தம கிறிஸ்தவனாய் நிலைநிற்பவன் மாத்திரமே, இந்த தீய அஞ்ஞான வழக்கங்களைக் குறித்து வெட்கப்பட்டு, ஒரு மனுஷனுக்கு ஒரே மனைவி என்னும் பிரமாணத்தை அனுசரிப்பதை பாக்கியமாக எண்ணி, தேவன் கட்டளையிட்டபடி மகிழ்வுடன் வாழுகிறார்கள்!**

விவாகத்தை நியமித்த கர்த்தர், ஒரு மனுஷனுக்கு ஒரே மனைவியைத் துணையாக ஏற்படுத்தினார். அதையே எக்காலத்துக்கும் பிரமாணமாக விதித்தார்! இவ்விதியை மீறும்போது, நிச்சயமாய் தேவாசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளவே முடியாது! ஆகவேதான், நமதாண்டவர் **புருஷன் மனைவி பிரிந்து போகக்கூடாதென** வற்புறுத்திப் பேசினார். கர்த்தராகிய இயேசுவை 'தன் ஆத்தும நேசராக' ஏற்றுக் கொண்டு, அவரில் இடைவிடாமல் மகிழும் உண்மை கிறிஸ்தவர்கள், புருஷர் மனைவியிடம் காணப்படும் குறைவுகளையும் ஒரு பொருட்டாய், நினைக்கவே மாட்டார்கள்! உன்னதத்தின் மேலான அவர்களின் சந்தோஷம் ஒன்றே, கீழான குடும்ப சந்தோஷத்தின் அவர்களுடைய குறைவுகளை கிறிஸ்துவுக்குள் நிறைவாக்கிவிடும்! ஆமென்.

- *S.பரமானந்தம்*

---

## 'சிறிதான நன்மையிலும்' தன் உறவை சேர்த்தே தருகிறார்!

*அவர் சமூகத்து பேரின்பமே, நமது வளர்ச்சி*

**தே**வனுடைய சமூகத்தில் நித்திய பேரின்பம் உண்டு! என்ற உன்னத அனுபவத்தையே கர்த்தர் நமக்கென்று வைத்திருக்கிறார் (*சங்.16:11*). கர்த்தர் தம்முடையவர்களுக்கு வழங்கும் அனைத்து நன்மைகளின் ஆசீர்வாதம் "அவரோடு நாம் ஐக்கியமாய் இருந்திட வேண்டும்" என்ற பிரதான நோக்கமே ஆகும். ஆனால் நாமோ அவ்வாறு இணங்காமல், கர்த்தரோடு வைத்துக்கொள்ளும் ஐக்கியத்திலிருந்து விலகி நிற்கிறோம். அதாவது, "அவருடைய சமூகத்தின் பேரின்பத்தை"

*நாம் அனுபவிக்க முடியாமல் தவித்து நிற்கிறோம். எப்படியெனில், அவர் வழங்கும் கிருபையை பெற்றாலும், 'அவரை அறியாமலே' தேங்கி நிற்கிறோம்! நம்முடைய விளக்கை எரியச்செய்யும் "அவரது சமூ கத்தின் எண்ணெய்" நமக்கு ஊற்றப்பட்டாலும் நாமோ அவருக்காக எரியாதவர்கள் போலவே இருக்கிறோம்!*

*உண்மை என்னவென்றால், கர்த்தர் வழங்கும் சகல நன்மைகளும் 'கிறிஸ்து இயேசுவோடு வைத்துக்கொள்ளும் உடன்படிக்கையின் ஊற்றாகவே' கர்த்தருடைய ஜனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் நாமோ, கர்த்தர் வழங்கும் சகல நன்மைகளையும் பெற்றுக் கொண்டாலும் "அவரையும், அவரது அன்பையும்" அறியாத ஜனங் களாய், அவரது சமூகத்தின் பேரின்பத்திற்கு தூரமாய் நிற்கிறோம்.*

> ***அ**ன்று, தனது நேச மணவாளியாய் இருக்கும்படி தெரிந்து கொண்ட எருசலேமோ, அவரை விட்டு தூரமாய் சோரம் போய் விட்டதை, எசேக்கியேல் 16-ம் அதிகாரம் எடுத்துரைக்கிறபடி, "கர்த்தருடைய தூய அன்பை ருசிக்காமலே" வாழ்ந்து கொண்டிருக் கிறோம். இருப்பினும், வெகு குறைவான ஜனங்களே, தங்களை வாழ வைக்கும் கர்த்தரோடு நெருங்கி, அவரது இனிமையான ஐக்கியத்தை பெற்றிருக்கிறார்கள். **இவர்கள் மாத்திரமே "கிறிஸ்துவுக்குள் வளர்ந்து வருகிறார்கள்"** என எபேசியர் 4:15 மகிழ்ச்சியுடன் கூறுகிறது. தேவனோடு கொண்ட நித்திய உறவில்தான் 'இந்த வளர்ச்சி' இருக்கிறது என்பதை, கர்த்தருடைய ஜனத்தில் கொஞ்சம் பேர்களே அறிந்திருக்கிறார்கள்!*

*உண்மை என்னவென்றால், நம்மில் மிக எளிமையானவர்கள்கூட தாவீதைப்போலவே "கர்த்தருடைய இருதயத்திற்கு ஏற்ற ஒரு மனுஷனாய் மாறிவிட முடியும்" (1சாமு 13:14)என்ற நற்செய்தியை நாம் அனைவரும் அறிந்து கொள்வோமாக! இன்றுவரை இதுபோன்ற வளர்ச்சியை இழந்த நீங்கள், மீண்டும் வளர்ச்சி அடைய முடியும் என்ற மாறாத உண்மையை விசுவாசித்திட துவங்குங்கள்! வேதம் நமக்கு எடுத்துரைக்கும் "கர்த்தரோடு கொண்ட இனிய உறவை" நாம் அடைந்திட வேண்டும் என்பதற்காகவே, நமக்கு உதவும்படியாக 'பரிசுத்த ஆவியானவர்' அருளப்பட்டிருக்கிறார்!*

*ஆகவே, இனிமுதற்கொண்டு உங்களுக்கு ஏற்படும் தேவை அல்லது தாழ்ச்சியின் நேரம் 'கர்த்தரை அணைத்துக் கொள்ளும்' உறவாய் மாறுவதாக! அவருடைய இரக்கத்திற்காக நீங்கள் கெஞ்சும் சூழ்நிலைகளில் 'அவரது கிருபாசனத்தை' விட்டுவிடாமல், உங்கள் கரங்களால் அவரை பிடித்துக் கொள்ளும் வரை நிலைத்திருப்பீர்களாக!*

*நமக்கு உதவி தேவைப்படும் ஒவ்வொரு சமயத்திலும், தமது கிருபையை கர்த்தர் தருவதாக வாக்குரைத்திருக்கிறாரே! (எபி.4:16).* அப்படியிருக்க, அவரது உறவையும் அவரது இனிமையான ஐக்கியத்தையும் நீங்கள் பெற முடியாதபடி, யார் உங்களை பின்வாங்க வைத்திட முடியும்?

**"ஒரு பிச்சைக்காரன் வேண்டுமானால், தனக்கு வழங்கப்பட்ட 'உபகார பிச்சையில்' திருப்தி கொண்டு போய்விடமுடியும். அப்படியொரு 'பிச்சைக்கார கிறிஸ்தவனாய்' அநேகர் வாழ்வதைப்போல் நீங்களும் வாழ்வது நியாயமல்ல! நீங்களோ, கிறிஸ்துவின் சுதந்தரராய் இருக்கிறபடியால், அவர் வழங்கும் ஆசீர்வாதத்தோடு, நல்ல மகிழ்ச்சியான புன்னகையோடு கர்த்தரை முத்தம் செய்து ஐக்கியம் கொள்ளவே நாட்டம் கொள்ளுங்கள்!**

*அவர் வழங்கும் இரக்கங்களைவிட, அவரே உங்கள் மேன்மை யல்லவா? அவரில்லாமல் 'அவைகளால்' என்ன பிரயோஜனம்? இனிமேலாவது, உங்கள் ஜெபத்தின் உரத்த சத்தமாய் "ஓ! என் ஆண்டவரே, நீர் தரும் ஆசீர்வாதங்களை நான் பெற்றுக் கொள்வது போதுமானதல்ல.... எனக்கு நீரே வேண்டும்! எதைத் தந்தும் நீர் என்னை ஆசீர்வதிக்கும்போது, உமது அன்பின் புன்னகை என்மீது வீசட்டும்! இல்லையென்றால், எதுவும் எனக்கு ஆசீர்வாதம் இல்லை!" என்ற வாஞ்சையான ஜெபம் உங்களின் நிலைத்த பங்காகட்டும்!*

**"இன்னும் அதிகமாய், உங்கள் ஜெபத்தில் "தேவரீர், மலர் தோட்டத்தில் உள்ள எல்லா மலர்கள் மீதும் ஒரு இனிய வாசத்தை வைத்திருக்கிறீர் அல்லவோ? அந்த வாசத்தை நீர் எடுத்து விட்டால், நறுமணம் அந்த மலரை விட்டுப் போய்விடும்! அதுபோலவே ஓ, கர்த்தாவே, உம்முடைய தூய அன்பையும், உமது மாறாத கிருபையும் என்னை விட்டு நீங்காதிருக்க அருளிச் செய்வீராக! ஆமென்" என்ற உணர்வுள்ள ஜெபமும், அவரது செவியில் உறைந்திருக்கச் செய்வீர்களாக!**

ஆகவே, ஓ கிறிஸ்தவனே உங்களுடைய இதய வீணை நரம்புகள் சரியான நிலையில் முடுக்கப்பட்டு இருப்பதாக! அப்போது மாத்திரமே **தெய்வ இரக்கத்தின் விரல்கள்** உங்கள் வீணையைத் தொடும்போது, இனிமை தரும் 'ஐக்கியத்தின் உறவு' தேவனையும் உங்களையும் மனம் குளிரச் செய்யும். அவரது நித்திய பேரின்பம் உங்களை ஆசீர்வதிக்கும்! இத்தனை பெரிய மகிழ்ச்சியை இழந்துவிட்டு 'வாழ்வின் அனுகூலங்களை' மாத்திரம் பெறுவது, துயரம் அல்லவா? வேதனை என்னவென்றால், இந்த பரிதாப நிலையே அநேக கிறிஸ்தவர்களிடம்

தேங்கி நிற்கிறது!

நம் வாசற்படியில் ஏராளமான நன்மைகளைக் கொட்டி வைத்து வழங்கிய ஆண்டவரை "வீதியில் விற்பனை செய்யும் சில்லறை வியாபாரியைப் போல்" கருதி, அவருக்கு நன்றி சொல்லி அவரை மகிழ்விக்காதிருந்த உங்கள் நிலைமையை கர்த்தர் உங்களுக்கு உணர்த்துவாராக. உண்மை என்னவென்றால் "**இவ்வித பூரித்த உறவே**" ஆயிரமாயிரமான சொல்லி முடியா பேரின்பத்தை உங்களுக்கு வழங்கியிருக்க முடியும்! அல்லேலூயா.

- *C.H.ஸ்பர்ஜன்*

---

## இன்றைய ஆராதனையில் 'பரிசுத்த அலங்காரம்' உண்டோ?

*'ஜீவியம்' இல்லாத ஆராதனை வீண்*

இன்றைய கிறிஸ்தவத்தில், ஆராதனை வேறு! ஜீவியம் வேறு! என துணிகரமாய் பேசவும், எண்ணவும் துவங்கிவிட்டார்கள். 'இஷ்டம் போல்' ஆராதனை நடத்துபவர்கள், ஜனங்களின் தவறான மனப்பான்மையை தங்களுக்கு சாதகமாக்கிக் கொள்கிறார்கள். அநேக குடும்பங்களிலுள்ள கணவன்மார்கள், தங்கள் மனைவியை பற்றிச் சொல்லி வருந்துவதெல்லாம் "என் மனைவி, ஆலயத்தின் ஆராதனை வேளையில் ஒரு தேவதூதனைப் போல் இருப்பாள்! ஆனால் வீட்டிற்கோ, சமையலறைக்கோ வந்துவிட்டால், பிசாசுபோல் மாறுவேஷம் கொண்டிருப்பாள்" எனக்கூறும் துயரமே இன்றைய பெரும்பாலான ஆலயங்களில் நிலவுகிறது!

> **"ஆனால், சத்தியவேதம் முதல் பிரதானமாய் கூறுவது என்னவென்றால் "உங்கள் சரீரங்களை பரிசுத்தமும் தேவனுக்கு பிரியமுமான ஜீவபலியாக ஒப்புகொடுங்கள்! இதுவே, நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை" (ரோமர்12:1) என்றே முக்கியப்படுத்துகிறது.**

'இந்த பரிசுத்த அலங்காரமே' ஆராதனையின் மேன்மை என சங்கீதம் 29:2 திட்டவட்டமாய் கூறுகிறது.

ஆராதனைக்கு வருகிறவர்கள், தங்கள் குடும்பத்திலுள்ளவர்கள் மற்றும் உறவுசார்ந்த அனைவரிடமும் சமாதானம் நிறைந்தவர்களாய் இருந்திடவே கர்த்தர் விரும்புகிறார். இதை பவுல் மேலும் குறிப்பிடும் போது "புருஷர்கள் கோபமும், தர்க்கமும் இல்லாமல் பரிசுத்தமான கைகளை உயர்த்தி 'ஆராதிக்க வேண்டுமென' விரும்புகிறேன்" எனக் குறிப்பிட்டார் (1தீமோ.2:8). பகைமை கொண்ட உள்ளம், கொலைக்கு சமமானது என 1யோவான் 3:11 எச்சரிக்கிறது.

*ஆகவேதான், ஒரு குடும்பமோ அல்லது குடும்பத்தை சார்ந்த மக்களோ, ஆராதனை செய்திட சபைக்கு வரும்போது "அவர்கள் பகைமை கொண்டவர்களிடம் முதலாவது ஒப்புரவு ஆக வேண்டும்" என இயேசு தன் மலைப்பிரசங்கத்தில் கண்டிப்புடன் கூறினார் (மத்.5:21-24).*

*ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் 'ஆராதிக்க வந்தவர்களால்' சபை நிரம்பிவிட்டதைக் கண்டு, சபை போதகமார்கள் இறுமாந்து மகிழ்ச்சி அடைகிறார்கள்! ஆனால் சபை மக்கள் வாழ்ந்திட காத்து நிற்கும் திங்கட்கிழமையை குறித்து சிறிதுகூட கரிசனையும், அக்கறையும் கொள்வதில்லை!*

> **"ஆலயத்தை நிறைத்த ஜனங்கள், வாழவேண்டிய சமுதாயத்தில் 'பூஜ்யமாய் இருந்தால்' அதில் எவ்வித நற்பயனுமில்லை. இங்கேயும் வாழ்க்கை வேறு, ஆராதனை வேறு, என குமுறும் கிறிஸ்தவர்களும் அநேகர் இருக்கிறார்கள்!**

*அதுபோன்றவர்களை வேதம் விட்டு வைக்காமல் "புசித்தாலும், குடித்தாலும் 'எதைச் செய்தாலும்' எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்" (1கொரி.10:31) எனக்கூறும் புத்திமதியை, உணர்ந்து நடப்போமாக!*

*ஆராதனையை மேன்மைப்படுத்தி பேசப்படும் பிரசங்கங்களுக்கு இன்று பஞ்சமே இல்லை! 'ஆராதனை' என்ற தலைப்பில் புத்தகங்களும் ஏராளமாய் எழுதப்பட்டுவிட்டன! திரளான வாலிபர்கள் ஆலயத்திலுள்ள ஆராதனை பகுதியை 'தங்களுக்குரிய மோகமாயும்' மாற்றிக்கொண்டார்கள். ஆனால், கர்த்தருக்குப் பிரியமான வாழ்க்கையைப் பற்றி வலியுறுத்திப் பேசும் தேவதாசர்களும், தேவசபைகளும் சொற்பமாகிப் போய்விட்டன!*

*அன்று சமாரியா ஸ்திரீ 'தன் ஜீவியத்தை மறைத்து' தான் கொண்டிருந்த தொழுகையை மேன்மைப்படுத்தி பேசினாள்! ஆனால் இயேசுவோ "உன் புருஷனை அழைத்துக் கொண்டு வா" எனக்கூறியதும், அவள் தன் வெறுமையை உணர்ந்தாள்! (யோவான் 4:16-18).*

*ஆம், ஜீவிய பரிசுத்தமே ஆராதனைக்கு அழகு சேர்த்திட முடியும்! பாடகரின் உடை அலங்காரமோ, இனிய இசைக் கருவிகளோ, ஆலய மேடையை அலங்கரிக்கும் வண்ண வண்ண விளக்குகளோ அல்ல, பரிசுத்த அலங்காரமே இன்று கர்த்தரை தொழுது கொள்ளும் முக்கிய பங்காய் தேவைப்படுகிறது! இதையே ஆதாரமாகக் கொண்டு 'கிறிஸ்தவர்களும், கிறிஸ்தவ சபைகளும்' விழிப்படைவார்களாக!*

*- R.ஸ்டான்லி BYM*

## பகைமை ஒழிவதே, ஐக்கியத்தின் இரகசியம்!

*பகையினால் ஏற்படும் 'பிரிவினை' பாவம்*

ஆதியில் ஏதேன் தோட்டத்தில், 'முதலாம் ஆதாம்' தேவனை விட்டுப் பிரியும்படி சாத்தான் செய்த தந்திரம் மகாகொடியது! 'சினேகமாய்' தேவனோடு உறவாடிய ஆதாமை, தேவனுக்குப் பகைஞனாய் மாற்றிய கொடூரம்! (ரோமர் 5:10). உண்மைதான், 'தேவனுக்குப் பகைஞர்கள்' என்றே, நாம் பெயர் சூட்டப்பட்டோம்! சாத்தான் தந்திரம் செய்த பகை யாதெனில் "தேவன் அப்படியா சொன்னார்? அப்படியில்லை, நான் சொல்வதே உண்மை? 'இத்தனை நன்மையான கனியை' தேவன் உனக்குத் தர மறுத்தது ஏன்?" போன்ற சந்தேகங்களையும், அவிசுவாசத்தையும் கொண்டு வந்து கொட்டி, **தேவனுக்கும் அவரது சொந்த ஜனத்திற்கும் இடையே 'பகையாகிய' நடுச்சுவரை எழுப்பி விட்டான்! (ஆதி 3:1–7).** சர்ப்பம் வஞ்சித்ததைத் தொடர்ந்து, சாத்தானின்தலையைநசுக்கிட தேவன்,"எந்தஸ்திரீயைநீவஞ்சித்தாயோ, அந்த ஸ்திரீயின் வித்தைக் கொண்டே உன் தலையை நசுக்குவேன்?" என, தேவன் தனது ஆதீனத்தில் சூளுரைத்தார்!(ஆதி.3:14,15).

தேவன் வாக்குரைத்தபடி, ஸ்திரீயின் வித்தாக வெளிப்பட்ட இயேசுவிற்கு, சாத்தானை ஜெயித்திட தேவன் தெரிந்துகொண்ட முற்றிலும் மாறுபட்ட வழியே, **சிலுவையின் அன்பின் வழி!** அது, பகைமைக்கு முற்றிலும் மாறுபட்ட தேவ வழி! ஆம், அவ்வழி சென்றே, நம் ஆண்டவர் இயேசு "பகையை சிலுவையினால் கொன்றார்!" (எபே.2:16). அவர் சென்ற சிலுவை வழி, ஞானிகளுக்கும், கல்விமான்களுக்கும் விளங்காத தாழ்மையின் வழி! பாலகர்களின் இருதயத்தில் நிலைத்திருந்த விசுவாச வழி! மரணபரியந்தம், அந்த ஒப்பற்ற சிலுவைக்கு இயேசு தன்னை தாழ்த்தியதே, நாம் பின்பற்ற வேண்டிய கீழ்ப்படிதலின் வழியாய் நிலைபெற்றது! (பிலி.2:8)

> "**அன்று ஆதாமிடம் சாத்தான் 'பகையை விதைத்ததினிமித்தம்' ஆதாமின் சந்ததியும் பாழ்பட்டு "பகைமை" தொடர்ந்தது! (ஆதி.3:23). பூமிக்கு தள்ளப்பட்ட ஆதாமின் மகன் காயீன், தன் சகோதரன் ஆபேலைப் பகைத்தான்!**

"சகோதர பகை, மனுஷீக கொலை பாதகம்" என்ற தேவ நியதியில், காயீன் ஆபேலை கொலை செய்தான்! (ஆதி 4:8). அன்று முதல் இன்று வரை, சந்ததி சந்ததியாய் தொடரும் பாவம் இந்த "பகைமையே". அதாவது, ஆதியிலே ஆரம்பித்த பாவம் விபச்சாரமல்ல, களவு அல்ல, பொருளாசை அல்ல... "பகையே" பிரதான பாவமாய் மாறி

*1) தேவனின் சினேகத்தை பிரித்துவிட்டது 2) ஒருவரையொருவர் நேசித்திடும் சினேகத்தையும் பிரித்துவிட்டது! இழந்துபோன தெய்வ சினேகத்தை மீண்டும் பெற்றிடவே, இயேசுவின் சிலுவை நமக்கு பாதை காட்டியுள்ளது! நம்முடைய பாவங்களை மன்னித்து* **'தேவனோடு ஒப்புரவாக்கும்'** *மாபெரும் தியாகமே, இயேசுவின் கொல்கொதா சிலுவை! மனந்திரும்பும் மாந்தர்கள் ஒவ்வொருவரும், இந்த சிலுவை யண்டை நெருங்கி வந்தே, தங்கள் பாவ பார சுமையிலிருந்துவிடுதலை பெற்றார்கள்! 'தேவனுடைய பிள்ளையாய்' மாறிடும் மீட்பு, இயேசுவின் சிலுவை மரணம் மூலமாய் தேவ கிருபையினால் அருளப்பட்டது!*

*தேவனுக்கும் நமக்கும் பகையை ஏற்படுத்திய சர்ப்பமாகிய சாத்தானை "சிலுவையின்மேல் ஆணியடித்து" அவனுடைய சகல துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்துபோட்டு "சிலுவையிலே வெற்றி சிறந்தார்" என கெம்பீரிக்கும் கொலோசெயர் **2:14,15** சத்தியம், இன்று நம் யாவருக்கும் சொந்தம்! இவ்வாறாகவே, தேவனுக்கும் நமக்கும் இடையிலான பகையாகிய நடுச்சுவரை, இயேசு சிலுவையினால் தகர்த்து, சாத்தானின் தலையை நசுக்கி வென்றார்! (எபே.**2:14-16**).*

"

**இயேசு வகுத்த 'அதே சிலுவையின் வழிதான்' நாம் ஒருவரையொருவர் நேசித்து 'பகையை' ஒழித்திட அருளப்பட்டுள்ளது!**

*கணவன் மனைவி; பெற்றோர் பிள்ளைகள்; சகோதர சகோதரிகள்; சபையிலுள்ள தேவமக்கள்; போன்ற இருவர் மத்தியில் எழும் 'பகையாகிய நடுச்சுவரை' நமக்கு முன்னோடியாக வாழ்ந்த இயேசுவைப் போலவே, "பகையை நம் மாம்சத்தில் கண்டு" அதை சிலுவையில் ஆணி அடித்து "ஒருவருக்கொருவர் ஐக்கியத்தை" சீர்ப் படுத்தி அன்புகூருவோமாக! ஆண்டவர் இயேசு தன் கடைசி ஜெபமாக, நமக்கென பிதாவிடத்தில் வேண்டி ஜெபித்ததெல்லாம் "பிதாவே, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல, இவர்கள் நம்மில் ஒன்றாயிருந்து.... ஒருவரோடொருவர் கொண்ட ஐக்கியத்திலும் தேறினவர்களாகும்படி வேண்டிக்கொள்கிறேன்" என ஏக்கமுடன் ஜெபித்தார்! (யோ.**17:21,23** ab). இதற்காகவே, என்னை அவர்களுக்கு வெளிப்படுத்தினேன்! என ஜெபித்து முடித்தார்! (யோ.**17:26**). இயேசுவின் ஜெபத்தின் பலனாக, அன்று முதல், இன்றுவரை அவரது 'சிலுவையின் அடிச்சுவடில்' செல்லும் சீஷர்கள் ஏராளம் உண்டு! அவரது ஜெப ஏக்கத்தை நாமும், நம் சபையும் நிறைவேற்றி, அன்பிலும் ஐக்கியத்திலும் கட்டப்பட கர்த்தர் அருள்புரிவாராக! ஆமென்.*

*- T.ரத்தினகுமார்*



'இருதயமே ஆராதனையின் முக்கியம்'
என முழங்கியவர்

## ஜோஹன் அர்ன்ட்

**15**-ம் நூற்றாண்டின் மிகச்சிறந்த பரிசுத்தவானாய் விளங்கியவர்! இவர் எழுதிய "உண்மை கிறிஸ்தவம்" (True Christianity) என்ற புத்தகம் மிகப்பெரிய எழுப்புதலை, அவர் வாழ்ந்த காலம் தொடங்கி இன்றுவரை அந்த புத்தகங்கள் பரிசுத்தமான புத்தகமாய் கருதப்பட்டு வருகிறது. மார்ட்டின் லூத்தர் அமைத்து தந்த சத்திய கோட்பாடுகளை 'அப்படியே வைத்திருந்து' சடங்காச்சார கிறிஸ்தவமாய் மாறுவதை மறுத்து, உயர்ந்த பரிசுத்தத்தை வலியுறுத்தி பிரசங்கித்தார். மார்ட்டின் லூத்தரைத் தொடர்ந்து, பரிசுத்த வாழ்க்கையை லுத்தரன் சபை கிறிஸ்தவர்கள் ஏன் நாடவில்லை? என மிக வைராக்கியமாய் கூறினார். அந்த நாள் லுத்தரன் சபை காலத்திலிருந்தே உதட்டளவில் தேவனை துதித்துவிட்டு, நிஜ வாழ்க்கையிலோ பக்தியற்ற ஜீவியத்தை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என சடங்காரச்சாரக் கிறிஸ்தவமாகிவிட்ட லுத்தரன் சபையை தட்டியெழுப்ப முயற்சித்தார்! நியமிக்கப்பட்ட பிஷப்புகள், சடங்குகளை மாத்திரமே கடைப்பிடித்து, திரளான ஜனங்கள் இருதயத்திலிருந்து புறப்படும் மெய் ஆராதனையை இழந்துபோகச் செய்துவிட்டார்கள்! இதன்விளைவாய், பெரும்பாலான ஜனங்கள் "மார்க்க சடங்கு பிரேதங்களாய்" தேங்கிவிட்டார்கள் என, அவர் பிரசங்க மேடைகளில் பிரசங்கித்தது மாத்திரமல்லாமல், "உண்மை கிறிஸ்தவம்" என்ற தலைப்பில் அடங்கிய பல புத்தகங்களில் மிக வலியுறுத்தி எழுதினார்! ஒரு கிறிஸ்தவனின் தனிப்பட்ட வாழ்க்கையில், தெய்வபயம் நிறைந்த வாழ்க்கை இல்லையென்றால், அவனுடைய கிறிஸ்தவ விசுவாசம் கேள்விக் குறியாய் மாறிவிடும்! என எச்சரித்தார்.

தன்னை தேவனுக்கு ஓர் வலிமையான கருவியாய் ஒப்படைத்து வாழ்ந்த தேவ ஊழியர் அர்ன்ட், தன் ஜெபத்தில் அடிக்கடி கூறி ஜெபித்தது என்னவெனில்:

**"என் தேவனே, என்னை சுற்றிலும், சிலுவை சுமந்து வாழும் மாந்தர்கள் ஏராளம்! வாழ்வின் கடின பாதையில் நடந்து செல்லும் உம் தாசர்கள் ஏராளம்! உம் தூயர்களின் துயரங்களை எளிதாக்குகிறவனாயும்; துயரத்தில் ஆறுதல் செய்யும் மகனாயும் நான் வாழ்ந்து பிரசங்கித்திட உமது அளவற்ற கிருபையையும், போதனையையும் தந்து என்னை வழிநடத்தும்!" என்றே ஜெபிப்பார்.**

- நிரூபித்து வாழ்ந்த கிறிஸ்துவின் தாசர்கள்

## 'சாத்தான் சபையிலிருந்து' விடுவித்த அன்பு இரட்சகர்!

தேவபக்தனாய் 19-ம் நூற்றாண்டு காலத்தில் வாழ்ந்த ஆர்தர் பிங்க், ஆரம்ப வாலிப நாட்களில், அவர் எத்தனை பக்தி வளர்ப்பில் வளர்க்கப்பட்ட போதிலும், காலம் செல்லச் செல்ல கிறிஸ்தவ அன்பிலிருந்து தூரமாக விலகிச் சென்றது மாத்திரமல்ல "பிரம்ம ஞான சபை" என்ற சாத்தானின் சபையில் அவர் சேர்ந்துகொண்டார். மனிதன் தன் நல்வினைக்குத் தக்கதாக திரும்பத் திரும்ப பிறந்து கொண்டே இருப்பான் என்ற துர்ப்போதனை, சாத்தான் சபையாரின் முக்கிய கொள்கையாகும். *ஆர்தர் பிங்க்* ஒவ்வொரு நாளும் தன்னுடைய 'அந்திக்கிறிஸ்து கூட்டங்களில்' பேசிவிட்டு இரவில் வெகு நேரத்திற்குப் பின்னர் வருவது வழக்கமாக இருந்தது. ஆனால், அவரின் தகப்பனார் *தாமஸ் பிங்க்*, மிகவும் பொறுமையுடன் வாலிப மகனின் வரவுக்காக ஒவ்வொரு நாள் இரவும் காத்திருந்து, தன்னுடைய மகன் படுக்கைக்குச் செல்லும்போது அவருக்கு "குட் நைட்" என்ற இரவு வந்தனத்தைக் கூறுவதுடன் சேர்த்து, ஒரு தேவ வசனத்தையும் சொல்லி அனுப்பி வைப்பார்.

ஒரு இரவில் "மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழியுண்டு, அதின் முடிவோ மரண வழிகள்" (நீதி 14:12) என்று சொல்லி அனுப்பினார். மேல் மாடிக்குச் சென்ற *ஆர்தர் பிங்க்* தன்னுடைய பிரம்ம ஞான சபையின் வருடாந்திரக் கூட்டத்தில் பேசுவதற்காகத் தன் அறையின் கதவைப் பூட்டிக் கொண்டு சொற்பொழிவுக்கான குறிப்புகளை எழுதும்படியாக முயற்சித்தார். ஆனால், தந்தை சொன்ன மேற்குறிப்பிட்ட நீதி.14:12 ஆம் வசனம் அவருடைய இருதயத்தில் ரீங்காரமிட்டு அவரை எழுதவொட்டாமல் தடுத்து நிறுத்திக் கொண்டிருந்தது. கடைசியாக, இனி தான் எந்த நிலையிலும் தன் ஆண்டவரைப் புறக்கணிக்க முடியாது என்பதைத் திட்டமாக உணர்ந்து, தேவனுடைய இரக்கத்திற்காக ஜெபத்தில் கெஞ்சத் தொடங்கினார். அவரது மேல்மாடியின் அறையில், ஆர்தர் பிங்க் மூன்று நாட்கள் வெளியே வராமல் கர்த்தருடைய இரட்சிப்புக்காகக் கெஞ்சி கதறினார்!

மூன்றாவது நாள் பிற்பகலில், *ஆர்தர் பிங்க்* கர்த்தருடைய இரட்சிப்பின் பாத்திரமாக, தேவ சமூகப் பிரசன்ன ஒளி நிறைந்த முகத்துடன் தன்னுடைய பெற்றோரண்டை மாடியிலிருந்து இறங்கி வந்தபோது, அவருடைய தகப்பனார் கர்த்தரில் களிகூர்ந்து "கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு துதி உண்டாவதாக. என் குமாரன் இரட்சிப்பைக் கண்டடைந்தான்" என்று ஆரவாரித்தார், ஆர்ப்பரித்தார்! அல்லேலூயா.

- சுவிசேஷ மலர்

சந்தா அனுப்ப
QR பயன்படுத்தவும்

பரலோக பொக்கிஷங்கள்

**Published and Owned by:**
**Madurai Christian Fellowship, Regd Society,**
***Editor* T.Rathnakumar, Madurai.**
**Printed by SFA Print (P) Ltd., Sivakasi.**

maduraichristianfellowship
@indianbk